**மாவட்ட அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

முன்னிலை: திருமதி. ஜி.எம். வசந்தி, எம்.எல்.,

முழுக் கூடுதல் பொறுப்பு மாவட்ட அமர்வு நீதிபதி, நாகப்பட்டினம்

(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)

**2026ம் ஆண்டு ஜூன் மாதம் 04ம் நாள்** - வியாழக்**கிழமை**

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் வைகாசி 21-ம் நாள்

**கு.ப.ம.எண். 421/2026**

1. அபிமணி, வயது 24/2026, த/பெ. மணிக்குமார்

2. விஜயன், வயது 44/2026, த/பெ கலியன் ..... மனுதாரர்கள்/ எதிரிகள்

-எதிர்-

காவல் ஆய்வாளர், திருக்கண்ணபுரம் காவல்நிலையம்.

குற்ற எண். 89/2026 ..... எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இன்று (04.06.2026) விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்தரப்பு வழக்குரைஞர் திரு. சி. விஜயராகவன் மற்றும் எதிர்மனுதாரர்தரப்பு அரசு வழக்குரைஞர் திரு. ஆர்.செல்வராஜ் ஆகியோர் ஆஜராகி எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.....

**// உத்தரவு//**

இம்மனு எதிர்மனுதாரர் / காவல் துறையினரால், ச/பி. 296(b), 118(1), 351(3) BNSன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் முன்ஜாமீன் வேண்டி சட்டப்பிரிவு 482 BNSSன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்கள்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர்கள் நிரபராதிகள் என்றும், மனுதாரர்கள் மீது பொய்யான வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும், காயம்பட்ட நபர் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டார் என்றும், இவ்வழக்கு எதிர்வழக்கு என்றும், மனுதாரர்கள் இந்த நீதிமன்றம் விதிக்கும் எந்தவொரு நிபந்தனைக்கும் கட்டுப்பட தயாராக உள்ளார்கள் என்றும், 1ம் மனுதாரர்/எதிரியை பொறுத்தவரை இந்த மனுவை தான் மேல்நடத்த வலியுறுத்தவில்லை என மனுவில் மேலொழப்பம் செய்துள்ளார். எனவே 2ம் மனுதாரருக்கு மட்டும் முன் ஜாமீன் வழங்கி உத்தரவிடவேண்டும் என்று கோரினார்.

3. அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் 2ம் மனுதாரர்/எதிரி மீது குற்ற வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை என்றும், காயம்பட்ட நபர் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டார் என்றும், வாதிட்டு 2ம் மனுதாரருக்கு முன்ஜாமீன் வழங்க ஆட்சேபனை தெரிவித்தார்.

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் மீது ச/பி. 296(b), 118(1), 351(3) BNSன் கீழ் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 18.05.2026 அன்று குற்றம் நடைபெற்றுள்ளது. இவ்வழக்கில் காயம்பட்ட நபர் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். மேற்படி சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு 2ம் மனுதாரருக்கு நிபந்தனைகளுடன் முன்ஜாமீன் வழங்கி உத்தரவிடுகிறது. 1ம் எதிரியை பொறுத்தமட்டில் கற்றறிந்த எதிரிதரப்பு வழக்கறிஞர் மேலொழப்பம் செய்யப்பட்டதைக் கருத்தில் கொண்டு, இந்த மனு மேல்நடத்த வலியுறுத்தப்படாததால் 1ம்

மனுதாரர்/எதிரிக்கு தள்ளுபடி செய்யலாம் என்றும், 2ம் மனுதாரரைப் பொறுத்து நிபந்தனையுடன் முன்ஜாமீன் மனுவை அனுமதிக்கலாம் என்றும் முடிவு செய்யப்படுகிறது.

முடிவில், **1ம் மனுதாரரை பொறுத்து இம்மனுவை மேல்நடத்த வலியுறுத்தப்படாததால் தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.** இம்மனு 2ம் மனுதாரருக்கு அனுமதிக்கப்பட்டு, 2ம் மனுதாரரை முன்ஜாமீனில் விடுவிக்க உத்தரவிடப்படுகிறது. 2ம் மனுதாரர் இந்த உத்தரவின் நகல் பெற்ற தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் கைது செய்யப்படும் பட்சத்தில் அல்லது **நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.2** நீதிமன்றத்தில் சரணடையும் பட்சத்தில், மனுதாரர் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மதிப்பிலான பிணையப் பத்திரத்தையும், அதே தொகைக்கு இரு தனிப் பிணையாளர் (surety) பிணையத்தையும், **நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.2**ன் திருப்திக்கு உட்பட்டு தாக்கல் செய்யவேண்டும். பிணைதாரர் (Surety) தனது நிழற்படத்தையும், இடது கை பெருவிரல் ரேகையையும் பிணைப்பத்திரத்தில் பதிக்க வேண்டும். மேலும், பிணைதாரரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக, அவருடைய ஆதார் அட்டை அல்லது வங்கி சேமிப்புப் புத்தகத்தின் நகலை நீதிபதி பெற்றுக்கொள்ளலாம்.

1. 2ம் மனுதாரர் முன் ஜாமீனில் வெளிவந்தது முதல், 30 நாட்களுக்கு தினமும் காலை 10.00 மணிக்கும் மாலை 05.00 மணிக்கும் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும்.

2. வழக்கில் தொடர்புடைய சாட்சியங்களை கலைக்கவோ, மிரட்டவோ, அல்லது சாட்சிகளைப் பாதிக்கக்கூடிய எவ்வித செயல்களிலும் ஈடுபடக்கூடாது.

3. 2ம் மனுதாரர் விசாரணை அல்லது வழக்கின் விசாரணையின்போது தலைமறைவாகக் கூடாது.

4. ஜாமீனில் இருக்கும் காலத்தில் வேறு எந்த குற்றச் செயல்களிலும் ஈடுபடக்கூடாது.

5. மேலே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றை மீறினால், வழங்கப்பட்ட முன்ஜாமீனை ரத்து செய்யக்கோரி, இந்த நீதிமன்றத்தை அணுகும் உரிமை எதிர்மனுதாரருக்கு உண்டு.

இன்று (04.06.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/- ஜி.எம். வசந்தி,
மாவட்ட அமர்வு நீதிபதி (முகூபொ)
(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)
நாகப்பட்டினம்.

நகல்

1. நீதித்துறை நடுவர் எண்.2, நாகப்பட்டினம்.
2. காவல் ஆய்வாளர், திருக்கண்ணபுரம் காவல்நிலையம்
3. திரு. சி. விஜயராகவன், வழக்கறிஞர், நாகப்பட்டினம்.